5 அறிக்கை அளித்தல்

(ஆ) கைலாசம் கமிஷன் நியமனம்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாமனறத்திற்கு ஒரு அறிவிப்பைத் தரவேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் நான் இங்கே இந்த அறிக்கையைப் படிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலிருந்து கேரளாவுக்கு எரி சாராயப் கொண்டு போக ஏற்றுமதி பெர்மிட் வழங்கியது பற்றி நீதி விசாரணை வைப்பதற்கு இந்த அரசு முன் வந்திருக்கிறது. ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. பி. எஸ். கைலாசம் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : நாங்கள் அதை வன்மையாக மறுக்கிறோம். ஏனென்றால் ஓய்வு பெற்ற திரு. கைலாசம் நீதிபதியாக நியமிக்கப்பட்டால் அது நல்ல தீர்ப்புக் கொடுக்காது என்று எங்களுக்குத் தெரியும். ஆகவே நாங்கள் வன்மையாக மறுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவையின் தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நாளை தொடரும். நாளைக் காலை வினா விடை நேரம் இருக்காது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளை (11.2.1981) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·35 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

(201) பெரியகுளம், உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள சில வழித்தடங்களில்— திருவாளர்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயக்கும் சிறிய பயணியர் பேருந்துகளைப் பொறுத்தவரையில் வரிவீதத்தைக் குறைத்து, செலுத்தத்தக்க வரிமீது மேல் வரியை விதிப்பது குறித்த, உள்துறையின் (போக்குவரத்து -1) 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் தேதியிடப்பெற்ற 3310 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.